**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**
**நாள். 19.11.2024.**
**O.S. 195/2022**
**வா.சா. 1 – ராஜசிங்**
**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது பெயர் ராஜசிங்கா, ராஜாசிங்கா என்றால் ராஜாசிங். நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் என் அப்பாவுக்கு சொத்து உரிமைப்பட்டது என்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ராஜலெட்சுமி அம்மா என்பவர் என் அப்பாவின் முதல் மனைவி என்றால் சரிதான். ராஜலெட்சுமி அம்மா திருநெல்வேலி மாவட்டம், மாவடி பண்ணையார் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். ராசையா நாடார், பெரிய நாடாச்சியின் ஒரே மகள் தான் ராஜலெட்சுமி என்றால் சரிதான். எனக்கு எந்த வருடம் ராஜலெட்சுமி அம்மாவிற்கும் எனது தந்தைக்கும் திருமணம் ஆனது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். ராஜலெட்சுமி ஒரே மகள் என்பதால் அவர் தாய், தந்தையின் சொத்துக்கள் அவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. ராஜலெட்சுமி எவ்வளவு பணம், நகை கொண்டு வந்தார் என்றால் தெரியாது. நான் முதல் விசாரணையில் ராஜலெட்சுமி கல்வியறிவு இல்லாதவர் என்று நான் சொன்னது யூகத்தின் அடிப்படையில் தான் என்றால் எனக்கு நேரடியாக அது பற்றி தெரியாது. ராஜலெட்சுமி கல்வியறிவு இல்லாதவர் இல்லத்தரசி என நான் சொன்னது கெட்ட எண்ணத்துடன் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் ராஜலெட்சுமி கல்வியறிவு இல்லாதவர் இல்லத்தரசி என நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். வா.சா.ஆ 1 ஆவணம் பிறப்பிக்கப்படும் போது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணம் படித்துப்பார்த்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1ல் சண்முகநாடாருடைய பணத்தை கொடுத்து மனைவி பெயரில் சொத்து வாங்கியதாக உள்ளதா என்றால் பத்திரத்தில் மனைவி விலைக்கு வாங்கியதாக உள்ளது. என் தந்தை சண்முகநாடாரின் தொகையில் மறுபயன் கொடுக்கப்பட்டது என நான் சொல்லியிருப்பது யூகத்தின் அடிப்படையில் தான் என்றால் என் தந்தை

என்னிடம் அவரது பணத்தில் வாங்கியதாகவும் அவருக்கு ஒரு பங்கு வரும் என்றும் அவர் பெயரில் பட்டா இருப்பதாகவும் என்னிடம் சொன்னார். என் தந்தை மேற்கூரியவாறு என்னிடம் சொன்னார் என்பதற்கு என்னிடம் எந்த ஆவணமும் கிடையாது என்றால் என்னிடம் சொன்னார் நான் சொத்தை பராமரித்தேன். எந்த தேதியில் என் தந்தை என்னிடம் சொன்னார் என்பதற்கான ஆவணம் உண்டா என்றால் 2010 இறுதியில் சொன்னார். மேற்படி விபரங்களை எனது வழக்குரை விபரத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சாட்சி ஆவணம் சமர்ப்பித்திருப்பதாக சாட்சியம் அளிக்கிறார். என் அப்பா என்னிடம் சொன்னதற்கு நான் எந்த ஆவணம் சமர்ப்பித்துள்ளேன் என்றால் என் அப்பா பெயரிலான பட்டா, வரிரசீது, கரண்டுபில் தாக்கல் செய்துள்ளேன் என் அப்பா என்னிடம் சொன்னதை நான் ரெக்கார்டு செய்யவில்லை. ராஜசெல்வி எனது பெரியம்மாவின் மூத்த மகள் என்றால் சரிதான். மேற்படி ராஜசெல்வி 1, 2 பிதிவாதிகள் பெயருக்கு விடுதலை எழுதிக்கொடுத்துள்ளார் அது வா.சா.ஆ 2 என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ல் என் அப்பாவிற்கு பங்கு உண்டு என சொல்லியுள்ளார் என்றால் என் அப்பாவிற்கு பங்கு உண்டு என என் சகோதரி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சொத்து கூட்டு அவகாசமாக என் தந்தையின் கைவசம் உள்ளது என்பதும் ஆவணத்தில் குறிப்பிடப்படவிலலை என்றால் என் தந்தைக்கு சொத்து இல்லை என்பதும் அந்த ஆவணத்தில் இல்லை. 2014 ல் என் தந்தை இறந்து போனார் என்றால் 16.03.2014 ல் இறந்து போனார். என் தந்தை சொத்தில் 1/3 பங்கு வேண்டும் என அறவிப்போ வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் என் தந்தையிடமே சொத்து இருந்ததால் அவர் வழக்கு தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து உரிமை, பட்டா ராஜலெட்சுமி பெயரில் இருந்தது என்றால் முதலில் ராஜலெட்சுமி பெயரில் இருந்தது அவர் இறந்த பிறகு என் அப்பா பெயருக்கு வாரிசு அடிப்படையில் மாற்றப்பட்டு விட்டது. என் அப்பா பெயரில் சொத்துக்களான ஆவணம் ரீதியா உரிமை கிடையாது என்றால் வாரிசு அடிப்படையில் பட்டா மாற்றி விட்டார் எங்களுக்கு

எழுத இருக்கும் போது இறந்த விட்டார். 1982 முதல் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை நான் 30 வருடமாக சொத்தில் எந்த உரிமையும் நான் கேட்கவில்லை என்றால் என் அப்பா உயிருடன் இருந்ததால் நான் உரிமை கேட்கவில்லை. என் அப்பா உயில் ஆவணம் இறப்பதற்கு முன்பாக எழுதினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அப்பா உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளாரா என்றால் இந்த சொத்து சம்மந்தமாக உயில் எழுத வில்லை. வேறு சொத்து சம்மந்தமாக உயில் எழுதிவைத்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தில் ஏற்கனவே 9, 10 கடைகள் உண்டு என்றால் 13 கடைகள் உண்டு இடியும் நிலையில் சில கட்டிடங்கள் உண்டு. தபசில் சொத்தில் உள்ள கடைகளின் அசஸ்மெண்ட் நம்பர் தெரியாது என்றால் பார்த்துதான் சொல்லமுடியும் நியாபகம் இல்லை. தாவா சொத்தில் உள்ள கடைகள் யார்யாருக்கு வாடகைக்கு கொடுத்துள்ளது என்ன வாடகை என்றால் என் தந்தையால் கொடுத்த ஆட்கள் அப்படியே இருந்தார்கள் கடைகள் யார்யாருக்கு வாடகைக்கு கொடுத்துள்ளது என்ன வாடகை என நியாபகம் இல்லை. தாவா சொத்தில் உள்ள கடைகள் 2011க்கு முன்பாக யார்யாருக்கு வாடகைக்கு கொடுத்தார் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் இனிதான் தாக்கல் செய்ய வேண்டும். ராஜலெட்சுமி உயிருடன் இருந்த காலத்தில் கணவர் சண்முக நாடாருக்கு பவர் கொடுத்திருந்தாரா என்றால் தெரியாது. ராஜலெட்சுமி இறந்த பிறகு சண்முக நாடார் கைவசத்தில் சொத்து இருந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இதுவரை தாக்கல் செய்யவில்லை இனிமேல் தாக்கல் செய்யலாம்.

**பிரதிவாதி தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**